பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 25 ஞாயிற்றுக்கிழமை 09.03.2025 கதிர் 121

உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

# தமிழ் அரசுக் கட்சி தனித்தே போட்டி

## ஓர் அணியாகப் போட்டியிடும் பேச்சு இடைநிறுத்தம்

இலங்கை தமிழ் அரசுக் கட்சி இம்முறை தனித்தே உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பாக போட்டியிடும் பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று கட்சியின் பொதுச்செயலாளரும்முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கூட்டம் நேற்று மாலை மட்டக்களப்பில்கட்சியின்மாவட்டதலைவரும் நாடாளுமன்றஉறுப்பினருமானசாணக்கியன் தலைமையில் நடைபெற்றது. ☞2



இனி இது ரகசியம் அல்ல!

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் ஜே.வி.பியின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கும் இடையேகடந்தசெவ்வாய்க்கிழமை இரவு கொழும்புக்கு அருகிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் ஒரு சிறப்பு சந்திப்பு நடைபெற்றுள்ளது. மவுண்ட் லவினியா ஹோட்டல், நாடு முழுவதும் அறியப்பட்ட ☞2

குழந்தைகளுக்கான

## உடல் தண்டனைகளை நிறுத்த விரைவில் சட்டம்

குழந்தைகளுக்கு உடல் ரீதியான தண்டனைவழங்குவதைத்தடைசெய்யும் சட்டப் பிரேரணை மிக விரைவில் நிறைவேற்றப்படும் என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ☞8

## தேசிய மகளிர் ஆணைக்குழு விரைவில் உருவாக்கப்படும்

பிரதமர் அறிவிப்பு

சுயாதீனதேசியமகளிர்ஆணைக்குழு வெகுவிரைவில் உருவாக்கப்படும். அரசமைப்புப் பேரவைக்கு நியமன பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில்நடைமுறைக்கு சாத்தியமான சட்டங்கள் இயற்றப்படும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ☞8

அதானி நிறுவனத்தின்

## மன்னார் காற்றாலைத் திட்டம் இன்னும் நிறுத்தப்படவில்லை

அதானி நிறுவனத்துடன் மேற்கொள்ள திட்டமிடப்பட்ட காற்றாலை மின் திட்டம் இன்னும் இரத்துச் செய்யப்படவில்லை என வலுச்சக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்தார்.

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடருக்கான வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சரின் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அமைச்சரின் தலைமையில் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றபோது இதனைத் தெரிவித்தார்.

இந்தக்குழுவில்பங்கேற்றநாடாளுமன்ற உறுப்பினர்கள் அதானி திட்டம் குறித்து வினவியதற்குப் பதிலளித்த வலுச்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி மேலும் தெரிவித்ததாவது:

அதானி நிறுவனத்தின் மின் திட்டத்தின் கட்டணங்கள் அதிகமாக இருந்ததால், அதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய அமைச்சரவைக்கு பரிந்துரைக்கப்பட்டது. அந்தச்சந்தர்ப்பத்தில், இந்தத்திட்டத்திலிருந்து விலகுவதாக இலங்கை முதலீட்டு சபைக்கு இந்தியஅதானிதாய்நிறுவனத்திலிருந்துஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய முதலீட்டு சபை இது குறித்து அமைச்சுக்கு அறிவித்துள்ளது. எனினும், காற்றாலைமின் திட்டம் தொடர்பாக இலங்கையில் உள்ள அதானி நிறுவனத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் நிறுவனத்துடன் ☞2

## மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க விடமாட்டோம்

எதிர்க்கட்சி எம்.பி. நாடாளுமன்றத்தில் குரல்

அரசின்வரிவருமானத்தைஅதிகரிப்பதற்கு பதிலாக, மின்கட்டணத்தை அதிகரித்து நாட்டிலுள்ள அனைவரிடமிருந்தும் மறைமுக வரியை அறிவிடுவதற்கு திட்டமிடுகிறது. ☞8

## கஞ்சா கலந்த மாவா பாக்கு தயாரிக்கும் இடம் சிக்கியது

யாழ். நகரில் சம்பவம்

கஞ்சாகலந்தமாவாதயாரிக்கும்இடத்தை யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முற்றுகையிட்டுள்ளனர். இதன் போது சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் மாவா போதை பொருள் தயாரிக்க பயன்படுத்தப்படும் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தக் கஞ்சா கலந்த மாவாப் பாக்கு பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்கப்படுவதற்காகத்தயாரிக்கப்பட்டவை ☞8

## எட்டு மாணவிகளின் மீது பாலியல் வன்கொடுமை

கணித ஆசிரியர் கைது

பத்தாம் வகுப்பில் படிக்கும் எட்டு மாணவிகளைபாலியல்வன்கொடுமை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் மார்ச் 7 அரலகங்வில பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டகணிதஆசிரியரை7 நாள்கள்விளக்கமறியலில்வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சந்தேகநபர் நேற்று பதில் நீதிவான் சந்தியா கருணாரத்னவிடம் முற்படுத்தப்பட்டபோது அவரை மார்ச் 14 வரை விளக்கமறியலில் வைக்க அவர் உத்தரவிட்டார்.

நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட கணித ஆசிரியரை மனநல மருத்துவரிடம் முன்னிறுத்திசோதனை நடத்த வேண்டும் என்று ☞8

## "சர்வதேசமே பதில் சொல்"

காணாமற்போனோரின் உறவுகள் முல்லைத்தீவில் நேற்று போராட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 வருடங்களுக்கு மேலாக நீதி கோரி கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொண்டு வரும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவுகோத்தபாயகடற்படைமுகாமிற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது வட்டுவாகல் பாலம் ஊடாக பேரணியாக சென்று, வட்டுவாகல் பகுதியில் தமது உறவுகள் ☞2

## பெண் ஆசிரியரை தாக்கியவரான ஆண் ஆசிரியர் மீது சட்டம் பாயும்

பிரதமர் ஹரினி தெரிவிப்பு

எம்பிலிபிட்டிய ஹல்மில்ல வித்தியாலயத்தில் சேவையாற்றும் பெண் ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தினார் என்று கூறப்படும் ஆண் ஆசிரியர் மீது உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எழுக்குமாறு கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளேன் என கல்வி அமைச்சரும், பிரதமருமான ☞2

## நாணய நிதியத்தின் பணிப்பாளர் நிகழ்நிலையில் அநுரவுடன் பேச்சு

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜிவா ஆகியோருக்கு இடையிலான நிகழ்நிலை சந்திப்பு சனிக்கிழமை இரவு நடைபெற்றது.

2023 மார்ச் மாத்தில் தொடங்கிய 48 மாதங்கள் நீடிக்கப்பட்ட நிதி வசதிக்கு அமைவான ஒப்பந்தம் பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டிருக்கும் இந்தத் தருணத்தில் இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு இடையிலான ஒத்துழைப்பை பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்த சந்திப்பின்போது, 2022 ஆம் ஆண்டில் முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் போது சர்வதேச நாணய நிதியம் வழங்கிய தொடர்ச்சியான ஒத்துழைப்பிற்கு ஜயாதிபதி நன்றி தெரிவித்தார்.

இதுகுறித்துஜனாதிபதிசெயலகத்தின்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொருளாதார மறுசீரமைப்பை செயற்படுத்தல்,பேரண்ட பொருளாதார ஸ்திரத் தன்மையை வலுப்படுத்தல், ஆபத்திற்கு உள்ளாக கூடிய தரப்பினருக்கு உதவுதல் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்தல் உள்ளிட்ட துறைகளில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்திருக்கும். ☞8

## இனி இது .....

ஒரு கதாபாத்திரமான உப்புல் சாந்த சன்னஸ்கலவின் ‘தங்கமலே’ திரைப்பட விழாவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சஜித்துடன், கம்பஹாவைச் சேர்ந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினரான பிரசாத் சிறிவர்தனவும் கலந்துகொண்டார்.

வழக்கமாக, இரவில் நடைபெறும் இதுபோன்றநிகழ்வுகளில், சிறிதுநேரத்திலேயே சஜித் விருந்தினர்களிடம் விடைபெற்று வெளியேறுவார், ஆனால் அந்த நாளின் சிறப்பு என்னவென்றால், நிகழ்வு முடிந்ததும், சஜித் மவுண்ட் லவினியா ஹோட்டலின் நீச்சல் குளப் பகுதியில் அதிகாலை 3 மணி வரை ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார். இந்த அரட்டை எதைப் பற்றியது என்று இன்னும் முழுமையாகத் தெரியவரவில்லை. என்றாலும் வழக்கத்திற்கு மாறாக சஜித் இப்படி ஜேவிபி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கொஞ்சிக் குலாவியது பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

...........................

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு இன்று கூடுகின்றது. இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் சேர்ந்தியங்க தான் எடுத்த முயற்சிகளின் அடைவு குறித்து தலைவர் சிவஞானம் கட்சிக்கு விளக்குவார் என்று தெரிகின்றது. கூட்டமைப்பாக இயங்குவதற்கான முயற்சி தொடர்பில் புளொட் அமைப்புக்கு சிவஞானம் அனுப்பி வைத்த கடிதத்திற்கு அனுப்பப்பட்ட பதிலில் இந்த முயற்சிக்கான அனுமதியை முதலில் மத்திய செயற்குழுவில் பெற்று வாருங்கள் என்று சிவஞானத்திற்கு சித்தார்த்தன் தெரிவித்திருந்தார். அதனால் தான் இந்த விவகாரத்தை நிச்சயம் 9ஆம் திகதி மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்த விவகாரத்தை முன்வைப்பேன் என்று சிவஞானம் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இதற்கிடையில் கூட்டமைப்பாக மீண்டும் செயற்படுவதற்கான முயற்சிகளை ரெலோ மற்றும் புளொட் ஆகியன நிராகரித்துவிட்ட நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை தமிழ் அரசுக் கட்சி தனித்தே சந்திக்கும் என்பது உறுதியாகிவிட்டது. ஆனாலும் தேர்தலின் பின்னர் ஆட்சி அமைப்பதற்கு இந்தக் கட்சிகளின் உதவி தேவைப்படலாம் அல்லது வேறு கட்சிகளின் உதவிகள் தேவைப்படலாம் என்பதால் அது குறித்து அந்தக் கட்சிகளுடன் எந்த வகையிலான இணக்கப்பாட்டுகளைத் தேர்தலுக்கு முன்னர் எட்டுவது என்பது தொடர்பில் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படும் என்று தெரிகிறது.

உதாரணத்திற்கு யாழ். மாநகர சபையில் மணிவண்ணன் தரப்பு சில இடங்களைக் கைப்பற்றினால், தமிழ் அரசு அவருடன் சேர்ந்த ஆட்சி அமைப்பதுடன் அவருக்கு மேயர் பதவியை வழங்க முடியுமா என்பது போன்ற இணக்கப்பாடுகளை எட்டுவது தொடர்பில் ஆராயப்படும்.

.................................

ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியின் தலைமைக் குழுவின் ’ஸ்கைப்’ கூட்டம் நேற்று நடந்தது. அந்தக் கூட்டத்தில் ஒரு சிறு குழப்பம் ஏற்பட்டது. தற்போதைய ஆளும் தரப்பின் வரவு செலவுத் திட்டத்தை ரெலோ தலைவர் அடைக்கலநாதன் கூட்டணியிடம் கேட்காமல் ஆதரித்தமை தொடர்பாக தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் சிறீகாந்தா அங்கு பிரச்சினை எழுப்பினார். ரெலோ செய்தது தவறு என்று சுட்டிக்காட்டினார். ஜனாதிபதித் தேர்தலின் போதும் ரெலோ இதேபோன்று செயற்பட்டது என்று பழைய பல்லவிகளை இழுத்துவிட்டு, இப்போதுரெலோசெய்துள்ளதை ஏற்கமுடியாது என்று கடிந்து கொண்டார்.

ரெலோ தலைவர் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்ததற்கான உண்மையான காரணத்தைத் தெரிவிக்கவில்லை என்றால் தனது கட்சி இந்தக் கூட்டணியில் இருந்து வெளியேறும் என்றும் தெரிவித்திருக்கிறார். ரெலோ தலைவர் கூட்டத்தில் தனது தரப்பு விளக்கத்தைக் கொடுத்தபோதும் சிறீகாந்தா அதனை ஏற்கவில்லை. தனது முடிவில் பிடிவாதமாக இருந்துள்ளார். ஆனால், அவர் இப்படித்தான் அடிக்கடி ஏதாவது பிரச்சினை செய்வார், கூட்டணியில் இருந்து வெளியேறுவேன் என்று மிரட்டுவார் ஆனால் அதெல்லாம் நடக்காது என்று கூட்டணித் தலைமைக் குழுக் கூட்டத்தில் தொடர்ந்து பங்கேற்கும் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் இந்தக் கூட்டணியில் இப்போது எத்தனை கட்சிகள் இணைந்து தேர்தலை எதிர்கொள்ளப்போகின்றன என்பது தொடர்ந்தும் மர்மமாகவே இருக்கின்றது. ஜனநாயகத் தமிழ் அரசுக் கட்சி இந்தக் கூட்டணியில் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி எந்த முடிவும் தெளிவாகத் தெரியவில்லை. இந்தக் கூட்டணியோடு தாம் ஒருபோதும் சேரப்போவதில்லை என்று ஜனநாயகத் தமிழ் அரசின் தலைவர்களில் ஒருவரான சரவணபவன் வெளிநாட்டு ஊடகங்களுக்குத் தெரிவித்தார் என்று வெளியாகி இருந்த செய்திகளைப் பின்னர் அவர் மறுத்திருந்தார். அவர் நாடு திரும்பிய பின்னர் கட்சியின் முடிவு அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டபோதும், அவர் நாடு திரும்பி பல நாள்களாகியும் எந்த முடிவும் அறிவிக்கப்படவில்லை. அதனால் இந்தக் கூட்டணியில் அந்தக் கட்சி இருக்கிறதா இல்லையா என்பது தெளிவாகவில்லை. இப்போது சிறீகாந்தாவின் கட்சியும் இந்தக் கூட்டணியில் இருப்பது தொடர்பில் குழப்பமே நிலவுகின்றது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தமிழ்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும்கட்சியின்நாடாளுமன்றக்குழுப் பேச்சாளருமான சிறிநேசன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநாத் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், வட்டாரக்கிளை தலைவர்கள், மாவட்ட கிளை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இம்முறை உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் அங்கு கலந்துரையாடப்பட்டதுடன் வேட்பாளர்கள் தெரிவு தொடர்பிலும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இதுதொடர்பில்சுமந்திரன்தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வேட்பாளர்கள் தெரிவு தொடர்பாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கிளை கூட்டம் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில்பிரதானமாகஒவ்வொரு பிரதேசமாக அலசி ஆராய்ந்து என்ன முறையிலான அணுகு முறையில் நாங்கள் இந்த தேர்தலை சந்திக்கவேண்டும் என்று பலருடைய கருத்துக்களும் கேட்கப்பட்டு சுமூகமான முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரையில்நாங்கள்போட்டியிடுகின்ற சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் வெற்றி வாகை சூடலாம் என்று நம்பிக்கையோடு எங்களுடையஉறுப்பினர்கள்இருக்கின்றார்கள். வருகின்ற வாரத்திற்குள் நாங்கள் வேட்பாளர் பட்டியலை இறுதி செய்து விடுவதாகத் தீர்மானித்திருக்கின்றோம்.

ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து போட்டியிடுவது வேண்டாம் என்று கூட்டத்தின் போது அனைவராலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. அந்த முயற்சி முடிவடைந்து விட்டது என்பதுதான் என்னுடையகருத்து. எங்களுடையகட்சியின் தலைவர் அதற்கான ஒரு முயற்சியை முன்னெடுத்திருந்தார். ஆனால் எங்களுடன் பங்காளிகளாக இருந்த கட்சிகள் தாங்கள் வேறு ஒருகூட்டணியாகஇணைந்துஇருக்கின்றோம் என்று எங்களுக்கு அறிவித்திருக்கின்றார்கள்.


ஆகையினால் ஓர் அணியாக ஒன்று சேர்ந்து போட்டியிடுவது என்பது இப்போது முடியாத விடயம். தமிழ் அரசுக கட்சி தனி அணியாகப் போட்டியிடும். தேர்தலுக்குப் பின்னர் நிர்வாகங்களை அமைக்கின்ற விடயத்தில் வெவ்வேறு கட்சிகளுடன் இணைந்துதான் நிர்வாகத்தை அமைக்க வேண்டியதாக இருக்கும். அதுதான் உள்ளூராட்சி மன்ற தேர்தலின் முறைமை ஆகையினால் அது குறித்துத் தொடர்ச்சியாகப் பல கட்சிகளோடும் பேசிக் கொண்டு இருக்கின்றோம்.

நடந்து முடிந்த தேர்தல்களோடு ஒப்பிடுகையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நாங்கள் முற்றிலும் மாறுபட்ட நிலைமையினையே எதிர்பார்க்கின்றோம். முன்னர் தேசிய மக்கள் சக்திக்கு ஒரு அலையோடு மக்கள் வாக்களித்ததை நாங்கள் கண்டோம். ஆனால் இந்த ஒரு சில மாதங்களுக்குள் தேசிய மக்கள் சக்தி தமிழ் மக்களது அபிலாசைகள் தொடர்பான விடயங்களில் எந்தவித முன்னேற்றத்தையும் காட்டவில்லை. ஒரு சறுக்கல் போக்கையே காட்டிக் கொண்டிருக்கின்றது. இதனை மக்களும் நன்றாக அறிந்திருக்கின்றார்கள். அதற்கும்மேல்அதிகமாகமத்தியஆளும்தரப்பு அவர்களிடம் இருந்தாலும் இருக்கட்டும் ஆனால் எங்களுடைய ஊர் ஆட்சி உள்ளூர் ஆட்சி எங்களோடு இருக்க வேண்டும் என்பதில் எங்களுடைய மக்கள் முனைப்பாக இருக்கின்றார்கள் - என்றார்.

# நூல் வெளியீடு

*கனடாவில் வாழும் இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான டி.பி.எஸ். ஜெயராஜ் எழுதிய ’ இலங்கையில் அரசியல் அதிகாரத்தின் வர்க்க மாற்றம் ’ என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (9/3) மாலை 5.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் இடம்பெறவிருக்கிறது.*

*வீரகத்தி தனபாலசிங்கம் தலைமையில்நடைபெறும்இந்நிகழ்வில் மூத்த பத்திரிகையாளர் அனந்த் பாலகிட்ணர்வெளியீட்டுஉரையையும் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர் பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரனும் சட்டத்தரணியும் சமூக, அரசியல் செயற்பாட்டளருமான சுவஸ்திகா அருலிங்கமும் சமகால அரசியல் நிலைவரங்கள் பற்றிய உரைகளையும் நிகழ்த்துவர்.*




*இந்த நூல் குமரன் புத்தக இல்ல பிரசுரமாக வெளிவருகிறது.*

## பெண்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பின் லக்மாலி ஹேமசந்திர விசேட கூற்றை முன்வைத்து ஆற்றிய உரைக்குப் பதிலளிக்கும்போது இதனைத் தெரிவித்தார்.

''சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடுகிறோம். இந்தவாரம்மகளிர்வாரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் பெண்கள் பல்வேறு சித்திரவதைகள் மற்றும் அடக்குமுறைகளுக்கு இன்றும் முகங்கொடுக்கிறார்கள். எம்பிலிபிட்டிய கல்வி வலயத்துக்குட்பட்ட எம்பிலிபிட்டிய ஹல்மில்லவித்தியாலயத்தில்சேவையாற்றும் பெண் ஆசிரியர் மீது அதே பாடசாலையில் சேவையாற்றும் ஆண் ஆசிரியர் ஒருவர் அதிபர் முன்பாகத் தாக்கி இருக்கிறார்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர் இந்தச் சம்பவம் தொடர்பில்பாடசாலையின்குறிப்புப்புத்தகத்தில் பதிவு செய்துவிட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இந்தச் சம்பவத்தை கல்வி அமைச்சரான பிரதமர் அறிவாரா?” என லக்மாலி ஹேமசந்திர கேள்வியெழுப்பினார்.

இதற்கு எழுந்து பதிலளித்த கல்வி அமைச்சரும், பிரதமருமான ஹரிணி அமரசூரிய, ”இந்தச் சம்பத்தை இன்று (நேற்று) காலை அறிந்தேன். இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து உரியசட்டநடவடிக்கையினையும், ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளேன்” என்றார்.

## சர்வதேசமே....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியாகக் கையளிக்கப்பட்ட இடத்தில் முடிவடைந்தது.

சர்வதேசமே பதில் சொல், சர்வதேசமே எமக்கான தீர்வு என்ன?, பிள்ளைகளை தினம் தேடிக்கொண்டே நீதியின்றி இறந்து கொண்டிருக்கின்றோம், கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்தை மூடி மறைக்க வேண்டாம், எமக்கு உண்மையும் நீதியும் வேண்டும், தமிழரைக்கடத்தாதே, இனவழிப்பு செய்யாதே, உங்கள் சிறைக்கூடம் எங்கள் பிள்ளைகளுக்கு என்ன கல்விக்கூடமா? எமது நாட்டில் நாம்வாழ உரிமையில்லையா? உலகமெல்லாம் பெண்கள் உரிமை பேசும் இந்நாளிலும் தெருவில் கிடந்து அழவைத்திருக்கிறது ஆளும்தரப்பு போன்ற பல்வேறு முழக்கங்களை எழுப்பிவாறும் பதாதைகளை தாங்கியவாறும் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தின்போது வட்டுவாகல் விகாரைக்குச் செல்லும் வழியில் அதிகளவவான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## மன்னார்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த விடயத்தைப் மீள் பரிசீலனை செய்யுமாறு அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, கடிதத்தை அனுப்பி இரண்டு வாரங்களுக்குள் பதில் எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால், இந்த இரண்டு வாரங்களில் எதிர்மறையான பதில் கிடைக்கப்பெற்றால் மாத்திரமே ஏனைய மாற்றீடொன்றுக்கு செல்லவேண்டிவரும். எதிர்காலத்தில் இவ்வாறான திட்டங்களை அரசுகளுக்கிடையிலானஒப்பந்தங்கள்மற்றும் போட்டியான கொள்முதல் என்பன மூலம் மாத்திரம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது - என்றார்.

இலங்கை மின்சார சபையில் பொறியியலாளர்கள்உள்ளிட்டவெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்துகுழுவில்கவனம்செலுத்தப்பட்டதுடன், பொருளாதார நெருக்கடியின் போது பல பொறியியலாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றதால் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக குழுவில் கலந்துகொண்ட அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இந்த வெற்றிடங்களை மூன்று தொகுதிகளாக நிரப்புவதற்கு அண்மையில் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், இதில் முதல் தொகுதி விரைவில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் என்றும் அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், திடீர் மின்வெட்டு குறித்தும் கலந்துரையாடப்பட்டது. கட்டமைப்பில் ஏற்படும்ஒருசிறிய மாற்றம்கூட கட்டமைப்பை நிலையற்றதாக மாற்றக்கூடும் என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அதனால், சூரிய சக்தி போன்ற ஏனைய மாற்று மூலங்களைப் பயன்படுத்தி அமைப்பை நிலையாகப் பராமரிக்க தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

வீதிவிளக்குகள்போதுமானளவுபராமரிப்பு செய்யப்படாமை தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. வீதி விளக்குகள் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களும் இலங்கை மின்சார சபையும் இணைந்து செயல்படவேண்டியதன் அவசியத்தை குழு வலியுறுத்தியது. விசேடமாக, இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்பதால், உள்ளூராட்சி நிறுவனங்களும் மின்சார சபையும் இணைந்து இந்தப் பிரச்சினை குறித்து கலந்துரையாடுவது பொருத்தமானது என்று குழு சுட்டிக்காட்டியது. இது தொடர்பான கொள்கை இரண்டு மாதங்களுக்குள் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக இந்த அமைச்சுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

# வடக்கு, கிழக்கில் சிதைவடைந்துள்ள பாதைகள் பாலங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்குக

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் அரசிடம் கோரிக்கை

வடக்கு, கிழக்கில் சிதைவடைந்துள்ள பாதைகள் மற்றும் பாலங்களை புனரமைக்க நடவடிக்கைகளை அரசு விரைந்து எடுக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் -

'ஒலுவில் துறைமுகம் தொடர்பில் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் எந்தவொரு விடயங்களும் முன்வைக்கப்படவில்லை. இது சம்பந்தமாக நான் ஏற்கனவே பேசியிருகின்றேன். ஒலுவில் துறைமுகத்தால் அந்த பிரதேசத்தில் உள்ள மக்களுக்கும் மீனவர்களுக்கும் எந்தவொரு பயனும் இல்லை. எனவே, இது சம்பந்தமாக உங்களுடைய நிலைப்பாடு என்ன? என்பதை சபையில் தெளிவுபடுத்துமாறு வேண்டுகின்றேன்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கிட்டங்கி பாலம், மாவடிப்பள்ளி பாலம் ஆகியன மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாத ஒன்று. இந்த இரண்டு பாலங்களும் மிகவும் முக்கியமானவை. இதனை அடுத்த வரவு - செலவுத் திட்டத்திலாவது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மேலும், மாவடிப்பள்ளி - கல்முனை பாதைக்கான மாற்றுப்பாதை போடப்பட்டு, ஏதோ சதி காரணமாக இடையில் நிறுத்தப்பட்டது. அந்தப் பாதை உயர்த்தி போடப்படாமையால், பொலிவேரியன் கிராமம் உள்ளிட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மிகவும் பாதிக்கப்பட்டதுடன், அப்பகுதி மக்களும் பாரிய அவலங்களுக்குள்ளாகினர். எனவே, இது தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு வேண்டுகின்றேன்.

அதேபோன்று, ஒலுவில், அஷ்ரப் நகரை ஊடறுத்துச் செல்கின்ற தீகவாபி பாதையையும் கொங்கிரீட் அல்லது காப்பட் வீதியாக பூரணப்படுத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது. மன்னார் நகரிலிருந்து புகையிரத நிலையத்திற்கு செல்கின்ற, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கீழ் உள்ள முக்கியமான பாதை இன்னும் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்றது. அதேபோன்று, முருங்கன் - சிலாவத்துறை வீதி ஆகியவற்றையும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் கவனத்திற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மேலும், வட்டுவாகள் பாலத்துக்கு ஆயிரம் மில்லியன் ரூபா நீங்கள் ஒதுக்கியிருக்கின்றீர்கள். அதற்கு வன்னி மாவட்ட மக்கள் சார்பாக நன்றி கூறுகின்றோம். ஆனால், அதன் மதிப்பீடு 2750 மில்லியன் ரூபாவாகும். எனவே, இது தொடர்பில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் நடவடிக்கை எடுக்குமாறு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதேபோன்று, வவுனியா, பரயனாளங்குளம் பாதை, வெளிக்குளம், மாமடுவ பாதையும் இன்னும் புனரமைக்கப்படாமல் இருக்கின்றன. நேரியகுளத்திலிருந்து நெளுக்குளம் செல்கின்ற பாதையில் 12 கிலோமீற்றரில் பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. மழை காலங்களில் வெள்ளத்தால் அப்பகுதி பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

புத்தளம் நகரத்தில் உள்ள பாதைகள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல், சாதாரண ஓட்டோ ஒன்றுகூட செல்ல முடியாத துர்பாக்கிய நிலை காணப்படுகின்றது. நான் கடந்த அரசாங்கத்துடன் பேசி, 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. புதிய அரசு வந்ததும் அந்த நிதி



சுற்றறிக்கை மூலம் மீளப் பெறப்பட்டுள்ளது.

அத்துடன், இராமேஸ்வரத்துக்கும் மன்னாருக்குமான கப்பல் சேவை இருந்த காலத்தில், மன்னார் ஒரு பொருளாதார கேந்திர தளமாக விளங்கியது. அன்றைய காலகட்டத்தில், அந்த மக்கள் பொருளாதாரத்தில் மேம்பட்டிருந்தார்கள். எனவே, இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவை மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, மன்னார் - புத்தளம் பாதை, மன்னாரிலிருந்து மறிச்சுக்கட்டி வரை, புத்தளம் முதல் எலுவன்குளம் வரையிலும் காப்பட் பாதையாக போடப்பட்டுள்ளது. சிறிய பகுதியே புனரமைப்பு செய்யப்படாமல் காணப்படுகின்றது. சில அரசு சார்பற்ற நிறுவனங்கள், அவர்களின் சொந்த தேவைகளுக்காக, அந்தப் பாதையை மூடுமாறும் புனரமைக்க வேண்டாம் எனவும் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தார்கள். ஆனால், நீதிமன்றம் இந்தப் பாதையை மூடுமாறு எவ்வித உத்தரவையும் பிறப்பிக்கவில்லை. எனவே, அமைச்சர் பிமல் ரத்னாயக இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, சட்டமா அதிபருடன் பேசி, சுற்றாடல் அமைச்சினது அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, இந்தப் பாதையை மக்கள் பாவனைக்கு புனரமைத்துக் கொடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன். நூறு வருடத்திற்கு மேலாக பழைமை வாய்ந்த அந்தப் பாதையினை பபயன்படுத்தப்படுகின்றபோது 100 கிலோமீற்றர் மிச்சப்படுத்தப்படும்.

அதேபோன்று, குருநாகல் - கண்டி அதிவேகப் பாதையினை வடக்கு, கிழக்குடன் இணைப்பதன் மூலம், அந்தப் பிரதேசங்களில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த முடியும்.

சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது, வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் பூரணப்படுத்தப்படாமல் அப்படியே இருக்கின்றன. மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களின் போது, அந்த வீட்டுத் திட்டங்களில் வசிக்கும் மக்கள் எம்மிடம் வந்து அழுது புலம்புகின்றனர். ஆட்சி மாறியதன் பின்னர் கோட்டா அரசாங்கம் அந்த வீட்டுத் திட்டப் பணிகளை பூர்த்தி செய்யவில்லை. கோட்டாவின் அவ்வாறான இனவாத செயற்பாடுகளால்தான் அவர் விரட்டியடிக்கப்பட்டார். எனவே, அவ்வாறான செயல்களை நீங்களும் செய்யாதீர்கள். சஜித் பிரேமதாசவால் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அது மக்களுக்கான வீட்டுத்திட்டம். எனவே, அந்த வீடுகளை கட்டி முடிக்க உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அத்துடன், சிலாவத்துறையில் ஒரு கலாசார மண்டபத்தை கட்டினோம். 20 சதவீத வேலைகள் நிறைவடைந்துள்ள நிலையில், அப்பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. கடந்த அரசாங்கம் நான்கு வருட காலமாக எஞ்சிய பணிகளை பூர்த்தி செய்யாமல் இழுத்தடித்தது. இந்தக் கட்டடத்தின் பணிகளை நிறைவுசெய்து தாருங்கள். அரசிடம் பணம் இல்லையெனில் வெளிநாடுகளின் உதவியைப் பெற்றாவது இந்தக் கட்டடத்தின் பணிகளை நிறைவுசெய்ய முன்வாருங்கள். இது தொடர்பில் சில நாடுகளுடன் நான் பேசியுள்ளேன். வெளிநாடுகள் உதவி செய்யத் தயாராக உள்ளன. - என்று கூறினார்.

## தேர்தலில் குறைந்தளவு பிரதிநிதித்துவம் கொண்ட குழுக்களின் ஈடுபாடு பற்றி வவுனியாவில் ஆராய்வு

தேர்தல் செயன்முறையில் பெண்கள், இளையோர் மற்றும் குறைந்தளவு பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் குழுக்களின் ஈடுபாடு மற்றும் தேர்தல் தொடர்பான தகவல்களின் தாக்கம் பற்றி தேர்தல் பங்குதாரர்களுடனான வவுனியா மாவட்ட மட்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தில் ஏற்பாட்டில் வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் இந் நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அரசியல் பன்மைத்துவம், தேர்தல் செயன்முறைகளில் பிரஜைகளின் அல்லது குடிமக்களின் ஈடுபாடு மற்றும் தகவல்களின் தாக்கம் தொடர்பில் இதில் கலந்துரையாடப்பட்டது.

மாற்று கொள்கைகளுக்கான நிலையம், சீபிஏ மற்றும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம், சீஎம்ஈவீ ஆகிய அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் விவரங்கள், பரிந்துரைகள் என்பனவும் இதன்போது பரிமாறப்பட்டன.

தேசிய ஒருங்கிணைப்பாளர் ஏ.எம்.என். விக்டர் மற்றும் வட மாகாண ஒருங்கிணைப்பாளர் சிவகுமார் அனோஜன் அவர்களின் பங்குபற்றுதலுடன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திவியா தர்மராசா அவர்களின் ஒழுங்கமைப்பின் கீழ் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தேர்தல் கண்காணிப்பாளர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

100





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆளும்தரப்பு என்ன செய்யப்போகிறது?

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அல்ஜெசீரா தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலின் பின்னர் அவரது வீட்டில் இயங்கியதாகக் குறிப்பிடப்படும் சித்திரவதை முகாம் குறித்த விசாரணை அறிக்கை மீண்டும் சர்ச்சைக்குரியவையாக மாறியுள்ளது. அது குறித்து அடுத்த வாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன.

பட்டலந்த அறிக்கை என்று அறியப்படும் இந்த அறிக்கை 25 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மீண்டும் ஊடக வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அல்ஜெசீரா தொலைக்காட்சியில் அந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்படவில்லை, அதனால் அதில் என்ன இருக்கின்றது என்று தெரியாது என ரணில் தெரிவித்தார். ஆனால், அதற்குப் பதிலளித்த முன்னாள் பி.பி.சி. செய்தியாளர் பிரான்ஸிஸ் ஹரிசன், அந்தஅறிக்கைஇணையத்தில்கிடைக்கிறதுஎன்றுதெரிவித்திருந்தார். அறிக்கையை அவர் பகிரங்கப்படுத்தியுமிருக்கிறார்.

இந்த அறிக்கை குறித்து அரசுத் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அமைச்சரவை அடுத்தவாரம் விவாதிக்க உள்ளது. இது 1980களின் பிற்பகுதியிலும் 1990களின் முற்பகுதியிலும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சித்திரவதைகள் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகளில் அரசியல்வாதிகளுக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறுகின்றது.

இது குறித்து அமைச்சரவையில் ஆராய்ந்த பின்னரே என்ன நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பில் தெரிவிக்க முடியும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் ரணிலின் குடியுரிமையை நீக்கவேண்டும் என்று மக்கள் போராட்டக் குழு ஏற்கனவே வலியுறுத்தியுள்ளது. இதனால் ஆளும்தரப்பு அழுத்தங்களுக்குள்ளாகியுள்ளது. எனவே இது தொடர்பில் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை அது எதிர்நோக்கியுள்ளது.

1980 களில் பட்டலந்தவில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டிலும் சித்தரவதைகள் இடம்பெற்றதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்பதே இப்போது சர்ச்சைக்குள்ளாகியுள்ளது. குற்றச்சாட்டுகள்ஆதாரமற்றவைஎன்று விக்ரமசிங்கே வலியுறுத்தினார், படாலாண்டாவில் நடந்ததாகக் கூறப்படும் நடவடிக்கைகளில் தனக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்ற தனது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

1994 ஆம் ஆண்டு அப்போதைய அரசுத் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் நிறுவப்பட்ட பட்டலந்தா ஆணைக்குழு, பட்டலந்தா வீட்டுவசதித் திட்டத்தில் நடந்த சித்திரவதை, சட்டவிரோத தடுப்புக்காவல்கள் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரித்தது. இந்த வீடு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கிளர்ச்சியை ஆளும்தரப்புஒடுக்கியபோது தடுப்புக்காவல் இடமாகவும் விசாரணை மையமாகவும் பயன்படுத்தப்பட்டது.

படலந்தாவில் நடந்தவைகள் குறித்து ரணிலுக்குத் தெரியும் என்றும், அந்த இடத்தைப் பார்வையிட்டார் என்றும் அறிக்கை குற்றம் சாட்டியது, இருப்பினும் சித்திரவதைகளுடன் அவர் நேரடியாகத் தொடர்பு கொண்டார் என்று நிரூபிக்கவில்லை. இருப்பினும் இந்தக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களின் குடிமை உரிமைகளை நீக்குதல் மற்றும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தல் உள்ளிட்ட பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைத்தது, ஆனால் இந்தப் பரிந்துரைகள் ஒருபோதும் செயல்படுத்தப்படவில்லை.

முன்னணி சோசலிசக் கட்சியின் (ய்றீஊண) பரப்புரைச் செயலாளர் துமிந்த நாகமுவ சமீபத்தில் இந்த அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். பொறுப்புக்கூறலின் அவசியத்தை அவர் மேலும் வலியுறுத்தினார், ஜே.வி.பி. உறுப்பினர்களை உள்ளடக்கிய தற்போதைய ஆளும்தரப்பு பட்டலந்த0 அறிக்கையின் பரிந்துரைகளின்படி செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த 'ஒரு வர்த்தமானி அல்லது புதிய சட்டம் தேவையில்லை. அறிக்கையை அமல்படுத்துவது, அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது, விக்ரமசிங்கவின் குடிமை உரிமைகளை நீக்குவது மற்றும் வழக்குத் தாக்கல் செய்வது அவசியம்,' என்று அவர் கூறினார். ஆளும்தரப்பு அதைச் செய்யுமா அல்லது முன்னைய ஆளும்தரப்புக்களைப் போன்றே குற்றவாளிகளைப் பாதுகாக்குமா?



# முடிவுக்கு வருகிறதா குர்திஷ்தான் போராட்டம் ?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

தனிநாடு கோரி போராடும் குர்திஷ் போராளிகள் அமைப்பான பி.கே.கே-க்கும் துருக்கிக்கும் இடையிலான மோதல் 1984 இல் தொடங்கியது. இந்த மோதல் பல்லாயிரக்கணக்கான இறப்புகளுக்கு வழிவகுத்தது.

கடந்த வாரம் 27/2/25 குர்திஷ் அரசியல் குழு, பி.கே.கே அமைப்பு தனது ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு கலைந்து செல்லுமாறு சிறையில் இருந்து குர்திஷ் போராளித் தலைவர்

அப்துல்லா ஒஜலான் அழைப்பை விடுத்தார்.

துருக்கியில் நாற்பது ஆண்டுகால தனிநாட்டு போராட்டத்தில் ஈடுபட்ட குர்திஷ் போராளிகள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். நீண்ட காலமாக தங்கள் இன அடையாளத்தைத் தக்கவைக்க குர்திஷ் மக்கள் போராடினர். ஆனால் அவர்களை எல்லை தாண்டியும் அழித்தொழிக்கத் துடித்தது துருக்கி.




### எல்லை தாண்டி அழித்த துருக்கி:

நீண்ட காலமாக தங்கள் இன அடையாளத்தைத் தக்கவைக்க குர்திஷ் மக்கள் போராடினர். ஆனால் அவர்களை எல்லை தாண்டியும் அழித்தொழிக்கத் துடித்தது துருக்கி.

சிரியாவில் கடந்த ஆண்டு இறுதியில் குர்திஷ் போராளிகளுக்கு எதிராக தரை வழியாகவும், வான் வழியாகவும் துருக்கி ராணுவம் தாக்குதல் நடத்தியதால் பாரிய அழிவை அவர்கள் சந்தித்தனர்.

நாற்பது ஆண்டுகால கிளர்ச்சியை நடத்தி வரும் குர்திஷ் போராளிகள், தங்கள் சிறையில் அடைக்கப்பட்ட தலைவரால் போராட்ட அமைப்பை நிராயுதபாணியாக்க அழைப்பு விடுத்தார்.

இரண்டுநாட்களுக்குப்பிறகுசனிக்கிழமை குர்திஷ் போராளிகள் போர்நிறுத்தத்தை அறிவித்தனர்.

குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி அல்லது பி.கே.கே-யின் போர் நிறுத்த அறிக்கையை அக்குழுவிற்கு நெருக்கமான ஊடக நிறுவனமான ஃபிரத் செய்தி நிறுவனம் வெளியிட்டது.

1999 முதல் துருக்கியால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அப்துல்லா ஒஜலணைப் பற்றி குறிப்பிடுகையில், அந்தக் குழு கூறியது: "தலைவர் அப்துல்லா ஒஜலான் அமைதி மற்றும்ஜனநாயகசமூகத்திற்கானஅழைப்பை செயல்படுத்துவதற்கு வழி வகுக்கும் வகையில் இன்று முதல் போர்நிறுத்தம் அமலுக்கு வருவதாக அறிவித்துள்ளார்.

துருக்கியால் தாக்கப்படாவிட்டால் எங்கள் படைகள் எதுவும் ஆயுதமேந்திய நடவடிக்கை எடுக்காது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

2015 கோடையில் பி.கே.கே மற்றும் துருக்கி படைகள் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததிலிருந்து, அமைதிக்கான

முதல் அறிகுறியாக இந்த போர் நிறுத்தம் உள்ளது.

குர்திஷ்தான் மற்றும் மத்திய கிழக்கில் ஒரு புதிய வரலாற்று செயல்முறை தொடங்கியுள்ளது என்பதை ஒஜலனின் அறிக்கை சுட்டிக்காட்டுவதாக பி.கே.கே தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### குர்திஷ்தான் பூர்வீக தாயகம் :

குர்திஷ்தான் என்பது துருக்கி, ஈராக், சிரியா மற்றும் ஈரானின் குர்துகள் வசிக்கும் பகுதிகளைக் குறிக்கிறது.

பி.கே.கேயின் தலைவர் அப்துல்லா ஒஜலான், 1999ல் இருந்து சிறையில் இருக்கிறார். எனினும் குர்திஸ் அமைப்பு தொடர்ந்து போராடி வருகிறது. பல அமைதி ஒப்பந்தங்கள் பயனற்றுப் போன நிலையில், சிறையில் இருக்கும் அப்துல்லாவை சமீபத்தில் துருக்கி அரசியல் தலைவர்கள் சந்தித்து, வன்முறையை கைவிடும்படி கோரினர்.

இந்த நிலையில், ஆயுதங்களை கைவிடுவதாக குர்திஷ் பி.கே.கே அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

குர்திஷ் அமைப்பைச்சேர்ந்த யாரும் ஆயுத தாக்குதலில் ஈடுபட மாட்டார்கள். துருக்கி, ஈராக், ஈரான், சிரியாவை உள்ளடக்கிய குர்திஷ் பிராந்தியம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் புதிய வரலாறு எழுதப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

துருக்கியில் அதிபர் எர்டோகன் பதவிக்காலம் 2028ல் முடிகிறது. அதன் பிறகும் பதவியில் தொடரும் வகையில் சட்டத்தை திருத்த குர்திஷ் ஆதரவு தேவைப்படுவதால், அவரது முயற்சியில் இந்த போர் நிறுத்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகிறது.

அத்துடன் சிரியாவில் அதிபராக இருந்த பஷிர் ஆசாத்தின் ஆட்சி கவிழ்ப்பு, லெபனானில் ஹெஸ்பெல்லா அமைப்பு பலவீனமானது போன்ற காரணங்களும், குர்திஷ் போராளிகளின் போர் நிறுத்த முடிவுக்கு காரணமாகக் கூறப்படுகிறது.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# முடிவுக்கு...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

**காவு வாங்கப்படும் கனவு தேசம்:**

சிரியாவில் பஷிர் ஆசாத் ஆட்சி வீழ்ச்சியின் பின்னர், குர்திஷ் மக்கள் தம் வசமுள்ள சுயாட்சி அதிகார பிரதேசத்தை பாதுகாக்க முயல்கின்றனர். ஆனால்




அங்கும் துருக்கியின் ஆக்கிரமிப்பு தொடருமானால், குர்திஷ்தான் மக்களின் நாடு காவு வாங்கப்படும் கனவு தேசமாகவே மாறும்.

ஈராக், ஈரான், சிரியா, துருக்கி நாடுகளுக்குள் ஆயிரம் பகைமை போட்டியிருந்தாலும், குர்திஷ்தான் என்கிற ஒரு அரசு உருவாகிவிடக் கூடாது என்பதில் இந்நாடுகள் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கின்றன என்பது உண்மை தான்.

**தாயகம் இல்லாத குர்திஷ் மக்கள் :**

மத்திய கிழக்கில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வரும் இனமான குர்திஷ் மக்கள் (லுற்ஷ-ஷ்விஜூ) தென்கிழக்கு துருக்கி, வட கிழக்கு சிரியா, வட ஈராக், வடமேற்கு ஈரான், தென்மேற்கு ஆர்மேனியா ஆகிய பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர்.

ஆயினும் தாயகம் இல்லாத மிகப்பெரிய இனக்குழுவான குர்திஷ் மக்கள் துருக்கியிலும், சிரியாவிலும் பிற இடங்களிலும் நீண்டகாலமாக துன்புறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.

ஐந்து நாடுகளில் சிதறி வாழும் குர்திஷ் மக்களின், பேரிடியாக ஐந்து நாடுகளிலுமே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட இனமாக கருதப்படுகின்றனர். இதன் விளைவாக விடுதலை போராட்டத்திற்கும் தள்ளப்பட்டார்கள்.

ஈராக், ஈரான், சிரியா, துருக்கி நாடுகளுக்குள் ஆயிரம் பகைமை போட்டியிருந்தாலும், குர்திஷ்தான் என்கிற ஒரு அரசு உருவாகிவிடக் கூடாது என்பதில் இந்நாடுகள் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கின்றன என்பது உண்மை தான்.

2011 இல் சிரியாவின் உள்நாட்டுப் போர் வெடித்த பிறகு, நவம்பர் 2103 இல் குர்திஷ் படைகள் வடகிழக்கு சிரியாவின் சில பகுதிகளில் சுயாட்சியை அறிவித்தன.

அங்கு அவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். சுமார் 30 மில்லியன் குர்திஷ் மக்கள் வடக்கு ஈராக், மேற்கு ஈரான், வடக்கு சிரியாவில் பரவி உள்ளனர். மேலும் துருக்கியின் மக்கள் தொகையில் சுமார் 18% பேர் உள்ளனர்.

**ஐந்து நாடுகளில் சிதறிய குர்திஷ்தான்:**



குர்திஷ்தான் தாயகமானது ஈராக், ஈரான், சிரியா, துருக்கி, ஆர்மேனிய நாடுகளுக்குள் ஒவ்வொன்றுடனும் இணைந்தவாறு, அந்தந்த நாடுகளின் எல்லைப் பகுதிகளிலேயே அமைந்திருக்கின்றன. குர்திஷ் மக்கள் வாழும் இந்த மலைப்பகுதிகளை இணைத்து 'குர்திஷ்தான்' எனும் தனிநாடு காண விரும்புகிறார்கள்.

முதலாம் உலகப்போருக்குப் பின்னர் ஓட்டோமான் சாம்ராஜ்யம் வீழ்ந்ததையடுத்து நடைபெற்ற 'வெர்சாய்ஸ்' சமாதான மாநாட்டில் குர்திஷ்தான் கோரிக்கை முதலில் முன்மொழியப்பட்டது.

இதையடுத்து, முதலாம் உலகப்போரில் வெற்றிபெற்ற மேற்கத்திய கூட்டுப்படையினர் சுவிட்சர்லாந்தில் கூடி, 'செவ்ரெஸ் ஒப்பந்தம்' கொண்டுவந்தனர். 1920ல் கொண்டுவரப்பட்ட அந்த ஒப்பந்தத்தில், ஐந்து நாடுகளிலும் உள்ள பகுதிகளை சேர்க்காமல், துருக்கியில் மட்டும் உள்ள பகுதியில் 'குர்திஷ் தேசம்' ஒன்று உருவாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், 1923ம் ஆண்டில் அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளுடன் கையெழுத்தான 'லாவ்சன்னே' ஒப்பந்தத்தின்படி நவீன துருக்கியின் எல்லைகள் வரையறுக்கப்பட்ட போது குர்திஷ் தேசம் உருவாக்கப்படவில்லை என்பது வரலாற்றின் மறைக்கப்பட்ட பக்கங்களாகும்.

ஆனால் தற்போது குர்திஷ் பி.கே.கே அமைப்பின் அரசியல் குழுவானது ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு கலைந்து செல்லுமாறு சிறையில் இருந்து குர்திஷ் போராளித் தலைவர்

அப்துல்லா ஓஜலான் அழைப்பை விடுத்தமை உள்நோக்கம் கொண்டதாக அறியப்படுகிறது.

ஐந்து நாடுகளில் சிதறிக் கிடக்கும் குர்திஷ் மக்களின் தாயகக் கனவு நனவாகாமல், கலைந்த கனவாக மாறிடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளது.



# பெண்கள் உரிமையை வென்றெடுப்பது பேச்சோடு மட்டுமே நின்றுவிடக்கூடாது

## உதுமான்கண்டு நாபீர் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)



பெண்களின்உரிமைகளை வென்றெடுப்பது பேச்சில் மட்டும் நின்றுவிடக் கூடாது என சமூக செயற்பாட்டாளரும் பொறியியலாளருமான உதுமான்கண்டு நாபீர் தெரிவித்தார்.

சர்வதேச மகளீர் தினம் தொடர்பில்அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது -

எமது நாட்டில் இதுவரையில் மகளிர் தினக் கொண்டாட்டங்கள் பெண்களின் உரிமைகள் பற்றி பேசுவதாக மாத்திரமே இருந்த போதிலும் பெண்களின் உரிமைகள் பேச்சளவில் மாத்திரம் இருக்கக் கூடாது . அதற்காக அரசாங்கம் தற்போது தேவையான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாரம்பரிய வகிபாகங்களுக்கு அப்பாற்பட்ட அறிவு திறன் மற்றும் தொழில் தன்மையுடன் கூடிய இலங்கைப் பெண்கள் இன்று இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு தனித்துவமானப் பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.உலகில் பெண்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஒரு நாளுக்கு மட்டும் மட்டுப்படுத்துப்படாமல் வருடத்தில்365நாள்களும்அவளுக்குமரியாதையும் பலமும் கொடுக்கப்பட வேண்டும். பெண்கள் காலூன்றி நிற்கும் வகையில் பொருளாதாரம் வலுப்பெற வேண்டும்.

இத்தகைய பின்னணியில் குடும்பம் மட்டுமின்றி சமூகத்திலும் பல்வேறு பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கும் பெண்கள் நாட்டின் அபிமானத்திற்குரியவர்கள். இன்று நாட்டின் பல்கலைக்கழகங்களில்கல்வி கற்கும் மாணவர்களில் பெண்களே பெரும்பான்மையாக உள்ளனர். ஆனால் பல்கலைக்கழகக் கல்வியை முடித்து திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்ற பிறகு அவர்களின் பயணம் நிறுத்தப்படுகிறது.

குழந்தைகளைப் பெற்றெடுப்பதும் தாயாகுவதும் விலைமதிப்பற்றது. ஆனால் அவர்களின் பயணம் இதோடு நின்றுவிட வேண்டியதில்லை. நம் நாட்டிற்கு அதிக அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவது பெண்கள்தான் என்பதைப் பெருமையுடன் நினைவுகூர வேண்டும். மேலும் விவசாயத் தொழில்துறை ஆடைத் தொழிலில் பெண்களே அதிகபங்களிப்பு செய்கின்றனர். ஒரு நாட்டின் அரசியலையும் பொருளாதாரத்தையும் மாற்றுவதன் மூலம் எதிர்காலத்தை தீர்க்கும் திறன் பெண்களுக்கு உள்ளது.

மேலும் மகளிர் தினத்தை ஒரு தினத்திற்கு மட்டுப்படுத்தாமல் புதிய சட்ட திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்கிப் பெண்களின் அபிமானம் மற்றும் பாதுகாப்பிற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் பெண்கள் மீதான பாகுபாட்டைத் தவிர்க்க முதல் முறையாக தேசிய ஆண் பெண் பாலினக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளமை சிறப்பம்சமாகும்.அத்தோடு அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கத் தேவையான சட்ட திருத்தங்களையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.இது தவிர அம்பாறை மாவட்டத்திலும்பெண்தலைமைத்துவகுடும்பங்கள் பாடசாலை கல்வி மற்றும் உயர்கல்வியை இடை நடுவில் கைவிட்டவர்களை இனங்கண்டு அவர்களுக்கான தொழிற்துறைகளை உருவாக்குவதும் இக்காலத்தின் தேவையாகவுள்ளது.திருமண வயதை எட்டியும் பொருளாதார சிக்கலினால் அவற்றைநிறைவேற்றசிரமங்களைஎதிர்கொள்ளும் பெண்களை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வினை காண முன்வர வேண்டும்.எதிர்காலத்தில் சுமார் 5000 பெண்களுக்கு இதனடிப்படையில் பல்வேறு வசதி வாய்ப்புக்களை வழங்க உள்ளேன்.

எதிர்கால சந்ததியினருக்கு மிகவும் பாதுகாப்பான மற்றும் வளமிக்க நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான எதிர்பார்ப்பதோடு சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

இவற்றுக்கு பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்னாயக, 'சுற்றாடல் பிரதி அமைச்சர் வடக்குக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். நீங்கள் குறிப்பிட்ட இடங்களையும் அவர் பார்வையிடுவார். அதன் பிற்பாடு தங்களுடன் கலந்துரையாடுகின்றேன். - என்று கூறினார்.




# வருடாந்த இப்தார்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை (ஜீ.எம்.எம்.எஸ்) பாடசாலையின் வருடாந்த இப்தார் வைபவம் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வின் விசேட மார்க்க சொற்பொழிவை சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் பேஷ்இமாம் எம்.ஐ.எம். ஆதம்பாவா (ரஸாதி) நிகழ்த்தினார்.

மேலும் இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம். நிஷாம், கல்முனை கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளர் யூ.எல்.எம். சாஜித், சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளர் திருமதி அஸ்மா அப்துல் மலீக், சாய்ந்தமருது பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு ஜும்மா பள்ளிவாசல்களின் தலைமை நிர்வாகிகள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்முனை கல்வி வலய அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவினர், பாடசாலை பழைய மாணவர்கள், பாடசாலை முகாமைத்துவ குழுவினர், பாடசாலை ஆசிரிய, ஆசிரியைகள், பிரதேச பிரமுகர்கள், கல்விமான்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# குடும்பஸ்தர் சடலமாக தர்மபுரம் பகுதியில் மீட்பு

தர்மபுர பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் வியாழக்கிழமை வீடு ஒன்றின் பின்புறமாக கைவிடப்பட்ட பகுதியில் 50வயது நான்கு பிள்ளைகளின் தந்தையே இறந்த நிலையில் சடலமாக இனம் காணப்பட்டுள்ளார்.

இறந்தமைக்கான காரணத்தை கண்டறிவதற்காக தடயவியல் பொலீஸாரின் உதவி நாடப்பட்டுள்ளதுடன் இறந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக தர்மபுர பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இரவுக் களியாட்ட நிகழ்வுகளில் அதிக ஒலி எழுப்புவதை மட்டுப்படுத்துமாறு பிரதி பொலிஸ் மா அதிபர் உத்தரவு

வவுனியாவில் தற்போது இடம்பெற்று வரும் களியாட்ட நிகழ்வுகளின் போது பரீட்சை எழுதும் மாணவர்களின் நலன் கருதி அதிக ஒலி எழுப்புவதை மட்டுப்படுத்துமாறு வன்னி பிரதி பொலிஸ் மா அதிபர் சாமந்த விஜேஜசேகரவால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சை நெருக்கும் நிலையில் வவுனியாவில் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் அதிக ஒலியுடன் களியாட்ட நிகழ்வுகள் இடம்பெற்று வருவதாகவும், அது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் பொது மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை வவுனியா ஊடகவியலாளர்கள் வன்னி பிரதி பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தனர்.

இதனையடுத்து இரவு நேர களியாட்ட நிகழ்வுகளின் போது அதிக ஒலி எழுப்புவதை உடனடியாக நிறுத்துமாறும், நிகழ்வு நடைபெறும் இடத்திற்குள் மட்டும் ஒலியை மட்டுப்படுத்துமாறும், கற்றல் செயற்பாட்டை பாதிக்காத வகையில் நிகழ்வை நடத்துமாறும் நிகழ்வுக்கான கால நீடிப்புகளை வழங்க வேண்டாம் எனவும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜய சோமமுனி அவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி கல்விப் பொதுச் சாதாரண தரப்பரீட்சை ஆரம்பிக்கவுள்ள நிலையில் தற்போது இடம்பெற்று வரும் களியாட்ட நிகழ்வுகளுக்கே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 100

# மன்னார், தெஹியத்த கண்டி சபைகளுக்கு எதிரான வழக்குகள் மீளப் பெறப்பட்டன

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு மன்னார் பிரதேச சபை மற்றும் தெஹியத்தகண்டிய பிரதேச சபை ஆகியவற்றுக்கு முறையே ஶ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ், ஐக்கிய தேசிய கூட்டமைப்பு என்பன தாக்கல் செய்திருந்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராகதொடுக்கப்பட்டிருந்தஇருவழக்குகள் உயர் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை மீளப் பெறப்பட்டன.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான மஹிந்த சமயவர்தன, மேனகா விஜேசுந்தர ஆகியோர் முன்னிலையில் இந்த மனுக்கள் மீள பெற்றுக் கொள்ளப்பட்டன.

உள்ளூராட்சி மன்ற விசேட ஏற்பாடுகள் சட்டமூலம்அண்மையில்நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்புமனுக்கள் இரத்தாகி இருந்த நிலையிலேயே இந்த ரிட் மனுக்கள் இரண்டும் மீளப் பெறப்பட்டன.

இவ்விரு வழக்குகளிலும் மனுதாரர்கள் சார்பில் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் உயர் நீதிமன்றத்தில் வாதாடியிருந்தார்.

மன்னார் பிரதேச சபைக்கான ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், ஏ.எச்.எம். இஸ்மத், எம்.ஐ.எம். இஸ்ஸதீன் ஆகியோர் மனு தாக்கல் செய்திருந்தனர்.

தெஹியத்தகண்டிய பிரதேச சபை தேர்தலுக்கான ஐக்கிய தேசிய கூட்டமைப்பு மனு நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து அக் கட்சியின் செயலாளர் நாயகம் எம். நயீமுல்லாஹ், டி.எம்.ஆர். பண்டா மற்றும் யூ. புஞ்சி பண்டா ஆகியோர் மனுதாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்ட முதுமாணி ரவூப் ஹக்கீமுடன் சட்டத்தரணிகளான எம்.ஐ.எம். ஐனுல்லாஹ், அஹமத் இல்ஹாம் காரியப்பர், சத்துரிக்கா பெரேரா ஆகியோர் தோன்றியிருந்தனர்.


உள்ளூராட்சி மன்ற தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் முன்னைய வேட்புமனுக்கள் இரத்தாகியதால் பிரஸ்தாப வழக்குகள் இரண்டையும் 6ஆம் திகதி மீளப் பெறவுள்ளதாக, செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் குறிப்பிட்டிருந்தார்.

# ஊருள் நுழையும் காட்டு யானைகளால் அம்பாறையில் மக்கள் பெரிதும் அச்சம்

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம்சம்மாந்துறை பிரதேச செயலாளர் எல்லைக்குட்பட்ட கைகாட்டி சந்தி எனும் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு 11.50 மணியளவில் காட்டு யானை வருகை தந்துள்ளது.

இதனால் இப்பகுதி மக்கள் கடும் அச்சத்தில் காணப்படுகின்றனர். உரியஅதிகாரிகள்யானைப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.



# இப்தார் நிகழ்வு

புனித நோன்பு ஆறு இப்தார் நிகழ்வு புதிய காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாயலில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பள்ளிவாயல் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில், அல்ஹாஜ் நஸீர்கானின் அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம் ஹிஸ்புல்லாஹ், பள்ளிவாயல் நிருவாகத்தினர், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.









காலைக்கதிர் Kalaikkathir

## எட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர், அதன்படி, சிறை அதிகாரிகள் மூலம் அவரை தடயவியல் மற்றும் மனநல மருத்துவர்களிடம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திம்புலாகல கல்வி வலயத்தில் உள்ள அரலகங்வில கல்விப் பிரிவில் உள்ள ஒரு பாடசாலையில் பத்தாம் வகுப்பு படிக்கும் எட்டு மாணவிகளின் பெற்றோர்கள், தமது பிள்ளைகளை இந்த ஆசிரியர் பலமுறை பாலியல் ரீதியில் துன்புறுத்தியுள்ளார் என்று கூறி அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட கணித ஆசிரியர் மார்ச் அரலகங்வில காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

பாலியல்வன்கொடுமைக்குஆளானதாகக் கூறப்படும் சிறுமிகளின் பெற்றோருக்கு நீதிமன்றப் படிவங்கள் வழங்கப்பட்ட பின்னர், சிறுமிகள் தெஹியத்தகண்டிய மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று அரலகங்வில காவல்துறையின் பதில் காவல்துறை அதிகாரி பிரதீப் சௌவிரத்ன விசாரணையில் தெரிவித்தார்.

## கஞ்சா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங்கும் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கபெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக யாழ். நகரில் வண்ணார்பண்ணை சிவன் கோயில் பின் வீதியான மானிப்பாய் வீதிக்கு அண்மித்த ஒரு வீட்டில் வைத்து சந்தேகநபரையும் பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் யாழ்ப்பானம் போதை ஒழிப்புப் பிவினரும் இணைந்து சுற்றி வளைப்பை மேற்கொண்டவேளை கஞ்சா கலந்த 4 கிலோ 250 கிராம் மாவா பாக்கு, பீடித்தூள் 12 கிலோ 500 கிராம் மற்றும் வாசனை திரவியம் 24 ரின் போன்ற பொள்கள் கைபெற்றபட்டன.

இதில் 24 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மாவா பாக்கு பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் உள்ள மாணவர்களுக்குத்தான் அதிகம் விற்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரத்துக்கு பின்னராக 75 வருட காலத்தையும் நாங்கள் விமர்சிக்கவில்லை. அரசியல் கட்டமைப்பையே சாபம் என்கிறோம். இலவச கல்வி மற்றும் இலவச சுகாதாரம் ஆகியவற்றால் பெண்கள் முன்னேற்றமடைந்துள்ளார்கள். ஆசிய வலய நாடுகளில் இலங்கையின் பெண்களின் கல்வி தரம் முன்னிலையில் உள்ளது.

பெரும் போராட்டத்தின் மத்தியில்தான் இலவசகல்வி உரிமைபெற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு காலத்தில் பெண்களுக்கு கல்வி உரிமை மறுக்கப்பட்டிருந்தது. அதற்கு எதிராக பெண்கள் போராடி இன்று சகல துறைகளிலும் முன்னணியில் உள்ளார்கள். இந்த முன்னேற்றத்தை வலுப்படுத்த வேண்டும்.

கல்வித்துறையை பொறுத்தவரையில் தற்போது ஆண்களின் கல்வி நிலை பின்னடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. இது பாரியதொரு பிரச்சினையாகும். கல்வித்துறையின் ஊடாகவே ஆண் - பெண் சமத்தவத்தை உறுதிப்படுத்த முடியும். ஆகவே ஆண்களின் கல்வி நிலை குறித்து விசேட கவனம் செலுத்தப்படும்.

சுயாதீன தேசிய மகளிர் ஆணைக்குழு வெகுவிரைவில் ஸ்தாபிக்கப்படும். அரசியலமைப்பு பேரவைக்கு இந்த ஆணைக்குழுவுக்கான நியமனங்கள் தொடர்பான பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. வெகுவிரைவில் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும்.

மகளிர் மற்றும் சிறுவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் வரவு செலவுத் திட்டத்தில் விசேட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. சிறந்த கலாச்சாரத்தை உருவாக்குவதன் ஊடாகவே ஆண்- பெண் சமத்துவ நிலையை மேம்படுத்த முடியும் என்றார்.

## மின்சாரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொலைக்குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களான முன்னாள் பொலிஸ் மா அதிபர் மற்றும் செவ்வந்தி என்ற பெண் இருக்குமிடங்களை அறிந்திருந்தும் அவர்கள் கைது செய்யப்படாமையானது ஆளும்தரப்புக்கும் இவர்களுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பிருக்கிறது என்பதை காண்பிக்கிறது எனவும் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தால் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்குமாறு ஆளும்தரப்புக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. அரச வரி வருமானத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக, மின்கட்டணத்தை அதிகரித்து நாட்டிலுள்ள அனைவரிடமும் தண்டப்பணம் அறவிடுவதற்கும் அனைவரிடமிருந்தும் மறைமுக வரியை அறிவிடுவதற்கும் திட்டமிடப்படுகிறது.

நாணய நிதியத்தின் நியாயமற்ற அழுத்தங்களுக்கு அடிபணிந்து மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. இதற்கு முன்னர் பொது மக்கள் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய மின்கட்டணத்தைக் குறைக்க முடிந்தது. நாமும் அதற்காகப் போராடினோம். எனவே மீண்டும் நியாயமற்ற முறையில் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டால், நாம் சட்டரீதியாக அது குறித்து பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தி அந்த முயற்சியை தோற்கடிப்போம்.

நாட்டு மக்களுக்கு நியாயமான விலையில் மின்சாரம் கிடைக்க வேண்டும். மாறாக அது வரி அறவிடுவதற்கான மறைமுக முறைமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் அதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. குறிப்பாக சூரிய மற்றும் காற்றாலை மின்னுற்பத்திகளை மின் கட்டமைப்பில் இணைத்து அதன் தொழிநுட்ப கூறுகளை மேம்படுத்திகுறைந்த விலையில் மின்சாரத்தை மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது ஆளும்தரப்பின் பொறுப்பாகும். அந்தப் பொறுப்புக்களைத் தட்டிக்கழித்து குரங்களைப் பற்றி பேசிக் கொண்டு, மின்சக்தி துறையை கேலிக்குள்ளாக்கி முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

அவ்வாறானதொரு சதித்திட்டம் இடம்பெறுவதை நாம் அறிவோம். அதனை நாம் தோற்கடிப்போம். இன்று நாட்டில் முன்னாள் பொலிஸ்மா அதிபரை தேட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளமை வெட்கத்துக்குரிய விடயமாகும். பிரதி அமைச்சர் சுனில் வட்டகல முன்னாள் பொலிஸ்மா அதிபர் இருக்குமிடத்தையும், கனேமுல்ல சஞ்சீவ கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான செவ்வந்தி என்ற பெண் இருக்குமிடத்தையும் நாம் அறிவோம் எனத் தெரிவித்துள்ளார்.

அவர்களை நாம் கைது செய்வோம் என்றும் அவர் கூறினார். சந்தேகநபர்கள் தலைமறைவாகியிருக்கும் இடம் தெரிந்தால் அவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு வலியுறுத்துகின்றோம். அவ்வாறின்றி அவர்கள் உடனடியாக கைது செய்யப்படவில்லை எனில் அவர்களுடன் ஆளும்தரப்புக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பிருக்கிறது. கொலைக்குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருக்குமிடத்தை அறிந்து கொண்டு அவர்களை கைது செய்யாவிட்டால் அது பெரும் தவறாகும் என்றார்.

## உடல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

'பெண்கள் சமூகத்திற்கு அளிக்கும் பங்களிப்பைக் கருத்தில் கொள்ளும்போது, ஒரு நாள் அல்ல, ஒரு வருடம்கூட, அவர்களைப் பற்றி விவாதிக்கப் போதாது.'

குழந்தைகளுக்கு உடல் ரீதியான தண்டனை வழங்குவதைத் தடைசெய்யும் மசோதாவை விரைவில் நிறைவேற்றுவோம். தண்டனை குழந்தைகளின் வளர்ச்சியில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வன்முறையால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று குழந்தைகள் உறுதியாக நம்பினால், பெரியவர்களாக இருந்தாலும் அவர்கள் அதைத் தொடர்ந்து செய்வார்கள். பாதாள உலகம் உட்பட அனைத்திற்கும் பின்னால், உடைந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குழந்தை இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் முகாமைத்துவ பணிப்பாளர், சிரேஷ்ட முகாமைத்துவம் உட்பட சர்வதேச நாணய நிதியத்தின் பணிக்குழுவினால் ஒத்துளைப்பு வழங்கப்பட்டது.

உலகபொருளாதாரஸ்திரமற்றதன்மைக்கு மத்தியில் இலங்கையின் பொருளாதாரத்தை தாங்கிக்கொள்ளும் நிலையுடையதாக மாற்றுவதற்கு இந்த தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும் அவசியமானதாகும் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

மேலும், பேரண்ட பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் மூன்றாவது மீளாய்வை முழுமைப்படுத்தல் மற்றும் பிணைமுறி பரிமாற்றம் மற்றும் கடன் மறுசீரமைப்பை சாதகமான முறையில் நிறைவு செய்தமை தொடர்பில் ஜோர்ஜிவா ஜனாதிபதிக்கு வாழ்த்து கூறினார்.

முக்கிய மறுசீரமைப்பை முன்னெடுக்க இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு முகாமைத்துவ பணிப்பாளர் பாராட்டு தெரிவித்ததோடு, இலங்கையின் பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைப்பதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் அர்ப்பணிப்பையும் உறுதிப்படுத்தினார்.

குறிப்பாக உலக ஸ்திரமற்ற தன்மையின் உயர்வு, உலகபொருளாதார முன்னேற்றத்தின் மந்த நிலை மற்றும் உலக கடன் மட்டத்தின் உயர்விற்கு மத்தியில் நல்லாட்சி கட்டமைப்புடன் பேரண்ட பொருளாதார நியதிகளையும் வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜோர்ஜிவா வலியுறுத்தினார்.

இலங்கை மக்களின் வலுவான ஆணையை பிரதிபலிக்கும் வகையில், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்துடன் முன்னோக்கிச் செல்லவற்கும், இணக்கம் காணப்பட்ட இலக்குகளை மக்களின் விருப்பத்துக்கு அமைய அடைந்துகொள்வதற்குமான தயார்நிலையை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

அதற்காக வறியவர்களின் முன்னேற்றத்துக்கு தேவையான பொறிமுறையை நடைமுறைப்படுத்தப்படுவதுடன், நலன்புரிச் செலவுகளை வலுப்படுத்தல் என்பவே அரசாங்கம் முன்னுரிமை அளிக்கும் விடயங்களாக உள்ளன என்பதையும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

மின்சார துறை உள்ளிட்டவற்றில் சரியான நிர்வாகம் மற்றும் செலவு - மீளமைத்தல் விலை நிர்ணயத்தின் ஊடாக அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முனைவுகளை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

கடன் அச்சுறுத்தலை குறைத்தல் மற்றும் நிலையான மற்றும் பேரண்ட அபிவிருத்தியை மேம்படுத்த பலதரப்பு கூட்டிணைவுகளின் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதன்போது வலியுறுத்தினார்.

நீடிக்கப்பட்ட கடன் வசதி வேலைத்திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள மீளாய்வுகளை சாதகமாக நிறைவு செய்வதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை ஜனாதிபதி இதன்போது கிரிஸ்டலினா ஜோர்ஜிவாவிடம் உறுதிப்படுத்தினார்.

இது குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜிவா தெரிவிக்கையில்,

எதிர்காலத்தை பார்க்கும்போது, இலங்கையை நிலையான மற்றும் சமநிலையான அபிவிருத்தியை நோக்கி தீர்மானம் மிக்க வகையில் நகர்த்தும் வேலைத்திட்டத்தின் கீழ் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலை பின்வாங்காமல் செயற்படுத்த வேண்டியது முக்கியமானதாகும்.

குறிப்பாக தொழில்நுட்பம் மற்றும் உலக அரசியலின் துரித வளர்ச்சியை கருத்தில் கொண்டு, நிலையான வகையில் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பும் செயற்பாடுகளின் சவால்மிகுந்த தன்மையை நான் ஏற்றுக்கொள்வதோடு, இலங்கையின் நிலையான பங்குதாரராக சர்வதேச நாணய நிதியத்தின் வகிபாகத்தையும் ஏற்றுக்கொள்கிறேன்.

அனைத்து துறைகளும் உள்ளடங்கும் அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு மற்றும் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தலுக்காக இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்தும் தயாராக இருக்கிறது என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜிவா மேலும் தெரிவித்தார்.

இலங்கை நிலைப்பேறான ஸ்திரதன்மையை அடைந்துகொள்வது தொடர்பான தொடர்ச்சியான கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பின் அவசியம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் முகாமைத்துவ பணிப்பாளருக்கு இடையில் இதன்போது இருதரப்பு ரீதியான இணக்கம் எட்டப்பட்டது.

செழுமையான மற்றும் நிலையான எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்து செயற்படுதல் மற்றும் அன்னியோன்னியமாக செயற்பட வேண்டியதன் அவசியமும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.




# பிள்ளைகளை ஒவ்வொருநாளும் தேடித் தேடி நீதி கிட்டாது இறந்து கொண்டிருக்கின்றோம்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்



முல்லைத்தீவுமாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டுமார்ச்மாதம்எட்டாம்திகதி ஆரம்பித்த தொடர் கவனவீர்ப்பு போராட்டமானது இன்றுவரை தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்தநிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 வருடங்களுக்கு மேலாக நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டம் மேற்கொண்டு வரும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கபப்பட்டவர்களின் உறவினர்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று (சனிக்கிழமை) முன்னெடுத்துள்ளனர்.

கவனவீர்ப்பு போராட்டம் முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாமிற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் வட்டுவாகல் பாலம் ஊடாக பேரணியாக



சென்று வட்டுவாகல் பகுதியில் இறுதியாக கையளிக்கப்பட்ட இடத்திற்குமுன்பாகவரை சென்று போராட்டம் நிறைவடைந்திருந்தது.

கவனவீர்ப்பு போராட்டத்தின் போது சர்வதேசமே பதில் சொல், சர்வதேசமே எமக்கான தீர்வு என்ன?, பிள்ளைகளை தினம் தேடிக்கொண்டே நீதியின்றி இறந்து கொண்டிருக்கின்றோம், கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்தை மூடி மறைக்க வேண்டாம்! எமக்கு உண்மையும் நீதியும் வேண்டும், தமிழரை கடத்தாதே! இனவழிப்பு செய்யாதே! உங்கள் சிறைக்கூடம் எங்கள் பிள்ளைகளுக்கு என்ன கல்விக்கூடமா? எமது நாட்டில் நாம்வாழ உரிமையில்லையா? உலகமெல்லாம் பெண்கள்உரிமை பேசும் இந்நாளிலும் தெருவில் கிடந்து அழவைத்திருக்கிறது அரசு போன்றபல்வேறுகோசங்களையும் எழுப்பி பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

கவனவீர்ப்பு போராட்டத்தின் போது வட்டுவாகல் விகாரைக்கு செல்லும் வழியில் அதிகளவான பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடதக்கது.




# சர்வதேச மகளீர் தினத்தையொட்டி பெரியளவில் சிரமதானப் பணிகள்

(பாறுக் ஷிஹான்)

சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு பாரிய சிரமதானத்தை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம் நேற்று (சனிக்கிழமை) காலை முதல் மாலை வரை மேற்கொண்டிருந்தது.

குறித்த சிரமதான முன்னெடுப்பானது அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட மணல்சேனை சுவாமி விபுலானந்தா வித்தியாலய சூழல் 'கிளீன் சிறீ லங்கா' வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக பெண்கள் சங்க உறுப்பினர்கள், பொதுமக்களின் ஒத்துழைப்புடன் ஆரம்பமானது.

கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் வழிகாட்டுதலில் சமூகப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹிட் தலைமையில் குறித்த சிரமதான முன்னெடுப்பானது சிறப்பாக நடைபெற்றது.

இதன் போது கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் சுற்றுச் சூழல் பிரிவு, சமூகப் பொலிஸ் பிரிவு ,சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவு என்பன பங்கேற்றன.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்குடனும் டெங்கு நோயின் தாக்கத்தை இப்பிரதேசத்தில் கட்டுப்படுத்தும் முகமாகவும் பாடசாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள குப்பைகூழங்கள் காடுமண்டிய இடங்கள் யாவும் துப்புரவு செய்யப்பட்டன. இதன்போது வீதியோரங்களில் தேங்கிக் காணப்பட்ட கழிவுகளை பொலிஸார் அகற்றி சுத்தப்படுத்தி சூழலை அழகுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.



# உயிர் காப்புப் பயிற்சி

(தில்சாத் பர்வீஸ்)

அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபர் ஐ.எல்.எம். முஸ்தபா மௌலவியின் தலைமையில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை கூட்ட மண்டபத்தில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்றது.

மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காத்தல் தொடர்பான பயிற்சி நெறியைக் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார் ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸால் சுமார் 30 தொடக்கம் 40 வரையான தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ஐந்தாம் நாள் பயிற்சியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டு இடங்கள், சேனநாயக்கா சமுத்திரத்தின் முக்கியத்துவம், வெள்ள நிலைமைகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் என பல விடயங்கள் தொடர்பான விளக்கம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது, அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபர் ஐ.எல்.எம். முஸ்தபா மௌலவியால் தொடர்ச்சியாக ஐந்தாவது நாளாக நோன்பு இல்லாத பிற மத சகோதரர்களுக்கு காலை, பகல் உணவுகள் என்பன வாங்கியவர்களுக்கு இப்பயிற்சியில் ஈடுபடும் அனைவரும் தமது கடவுளிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கிழக்கு ஆளுநர் ஜயந்தலாலை சந்தித்தார்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் கிழக்கு மாகணத்திற்குப் பொறுப்பான புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருணஜெயசுந்தர ஆகியோருடன், மாகாண மக்களின் அன்றாட வாழ்க்கை குறித்த கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு சுமுகமான சந்திப்பு வெள்ளிக்கிழமை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இங்கு, சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் என அனைத்து சமூகங்களும் வசிக்கும் கிழக்கு மாகாணத்தில் சட்டம்



ஒழுங்கைப் பராமரிப்பது குறித்து இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir




## தொலைநோக்குத் தலைவர் , அர்ப்பணிப்புள்ள வழிகாட்டி

# திரு.S.இராஜநாதனுக்கு ஒரு அஞ்சலி

எமது யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி தென் இலங்கைப் பழைய மாணவர் சங்கத்தில் ஆழமாகத் தடம் பதித்தவரும் தனித்துவமான தலைமைத்துவப் பண்பும் தளராத அர்ப்பணிப்பும் கொண்டவருமாகிய எமது முன்னைநாள் தலைவர் , உப-போசகர் திரு. சீனித்தம்பி இராஜநாதன் அவர்களுக்கு மிகுந்த மரியாதையுடனும் நன்றியுடனும் அஞ்சலி செலுத்துகின்றோம்.

எமது பாடசாலையின் 200 ஆவது ஆண்டு கொண்டாட்டங்களின் போது நாம் ஏற்பாடு செய்த நிகழ்வின் இணைத் தலைவராகக் கடமையாற்றிய அவருடன் நெருக்கமாகப் பணியாற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இந்தச் சமயத்தில்தான் அவருடைய சிறப்பான தலைமைத்துவப் பண்புகளை நான் உண்மையாகக் கண்டுகொண்டேன். குழுவைச் சமப்படுத்தவும், நன்கு பரிசீலித்து முடிவுகளை எடுக்கவும், சவால்களை நிதானத்துடன் தீர்க்கவும் அவர் கைக்கொண்ட அணுகுமுறை உண்மையிலேயே ஊக்கமளிப்பதாக இருந்தது. அவரது வழிகாட்டுதலும் தொலைநோக்கு பார்வையும்தான், ஒவ்வொரு விடயமும் சிறப்பாகச் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்து, நிகழ்வை மகத்தானதாக வெற்றியடையச் செய்தது.

திரு. ராஜநாதன் எங்கள் நுயபு க்கு சிறந்த பங்களிப்பாளராக மட்டுமல்லாமல் ஒரு வழிகாட்டியாகவும் ஊக்குவிப்பவராகவும் இருந்தார். தன்னைச் சுற்றியுள்ளவர்களின் முயற்சிகளை அங்கீகரித்துத் தட்டிக்கொடுத்துத் தூக்கிவிடும் ஒரு தனித்துவமான மனிதராக இருந்தார். எனது பங்களிப்பை அங்கீகரிக்கவும் பாராட்டவும் அவர் தனிப்பட்ட முறையில் என்னை அழைக்கும் தருணங்களை நான் எப்போதும் மகிழ்ச்சியுடன் நினைக்கின்றேன். மற்றவர்களை உயர்த்துவதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் முழு மனதோடு செயற்படும் அவரது பண்பு அவரது சமூக அர்ப்பணிப்புக்கு சிறந்த சான்றாகும்.

அவரது சேவை, தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டுதல் ஆகியவை நம் அனைவருக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கும். அவர் இப்போது எங்களுடன் இல்லை என்றாலும், அவரது பங்களிப்புகள் மற்றும் அவர் எங்களில் விதைத்த எண்ணங்கள் எங்கள் நுயபு க்கும் அதற்கு அப்பாலும் வழிகாட்டும் சக்தியாக எப்போதும் இருக்கும் என்று நம்புகிறேன்.

– சுபாஸ் நிஷாந்தா, நிறைவேற்றுக் குழு உறுப்பினர்–
யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்– தென் இலங்கை.

# கொரோனா காலத்தில் எரிக்கப்பட்டவர்களின் விவரங்கள் விரைவில் நாடாளுமன்றுக்கு வரும்

## அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ உறுதி

(ஹமீட்)

சுகாதார அமைச்சின் ஆலோசனைக் கூட்டம் சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ அவர்களின் தலைமையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற போது, அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை, கொரோனா காலத்தில் எரிக்கப்பட்டவர்களின் விவரங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சரான தங்களிடம் எங்களின் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் கேட்டுக் கொண்டார்.

ஆனால், இதுவரையும் கொரோனா காலத்தில் எரிக்கப்பட்டவர்களின் விவரங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் உள்ளீர்கள். கொரோனா காலத்தில் எரிக்கப்பட்ட முஸ்லிம்களின் ஜனாசாக்கள் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் நடைபெறவில்லை எனவும், முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்புக்கு எதிராக இன்றைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கா அன்று எங்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போது எங்களுக்காக குரல் கொடுத்தார் என்பதனை நினைவூட்ட விரும்புகிறேன்.

நிலைமை இப்படி இருக்க, ஏன் நீங்க இதுவரையும் எரிக்கப்பட்டவர்களின் விவரங்களை சமர்ப்பிக்காமல் உள்ளீர்கள் ? இந்த விடயத்தில் எமது முஸ்லிம் சமூகம் மிகவும் கவலை அடைந்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ விரைவில் கொரோனா காலத்தில் எரிக்கப்பட்டவர்களின் விவரங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருப்பதாக தெரிவித்தார்.

பொத்துவில் தள வைத்தியசாலையில் நிலவுகின்ற ஆளணிகள் நிரப்பப்படாமல் உள்ளதால் பொத்துவில், லகுகல, பாணம, கோமாரி ஆகிய பிரதேசங்களில் வாழும் மூவின மக்களும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதுடன், உல்லாசத் துறைக்கு மிக முக்கியமான பிரதேசமாக அமைந்துள்ள பொத்துவில் தள வைத்தியசாலையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையினை உடன் நிரப்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், வைத்திய அதிகாரிகள் வெற்றிடம் 22, விசேட வைத்திய நிபுணர்கள் 03, பல் வைத்திய நிபுணர் 01, மருத்துவ தாதிகள் 44, கணக்காளர் 01, நிர்வாக உத்தியோகத்தர் 01 உட்பட பல ஆளணிகள் வெற்றிடமாக உள்ள விவரங்களை சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த அவர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை கையளித்தார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜெயசிங்க பதிலளிக்கையில் -

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் 



நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

பாலமுனை வைத்தியசாலையினை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் ஈ.என்.ரி. பிரிவை அமைப்பதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் பரிந்துரை செய்யப்பட்டும் இதுவரையும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதால் இது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார். இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

# பெண்கள் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் கற்பிட்டியில் உதயம்





(சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பெண்களால் முன்னெடுக்கப்படும் உற்பத்தி பொருள்கள் மற்றும் விற்பனைகளை மேம்படுத்தும் நோக்கோடு கற்பிட்டியில் பெண் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் என்ற அமைப்பு கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சாந்திலதா தலைமையில் மகளிர் தினத்தை முன்னிட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் சமூக வலுவூட்டல் அமைச்சின் புத்தளம் மாவட்ட உளவளதுணை இணைப்பாளர் எச்.எம் நிப்ராஸ், கற்பிட்டி பிரதேச செயலகத்தின் இளைஞர் சேவை பொறுப்பதிகாரி ஏ.ஆர் முனாஸ், கலாசார உத்தியோகத்தர் எஸ் ஏஎஸ் சமரசிங்க, மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் பாசில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் சபீர், அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். சிபாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெண் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் ஊடாக பெண்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்துவதற்க்கும் அவர்களின் உற்பத்திப் பொருள்களை தரம் மிக்கதாகவும் அவர்களுக்கான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# உள்ளூராட்சி மன்றங்களின் பழுதடைந்த வாகனங்கள் குறித்து ஆளுநர் கரிசனை

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகர மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இடையே திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இசட்.ஏ.எம். பைசல், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உதவி உள்ளூராட்சி ஆணையர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தக்கூட்டத்தில், உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான பயன்படுத்த முடியாத வாகனங்களை ஏலம் விடுதல், வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பயன்படுத்துதல், ஜப்பானிய உதவியின் கீழ் வழங்கப்படும் கம்பேக்டர் இயந்திரங்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்குதல், கழிவு முகாமைத்துவம் மற்றும் தனியார் துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் திட்டங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் வழங்கும் சேவைகளை நெறிப்படுத்துதல் மற்றும் வினைத்திறன் மிக்கதாக்குதல் குறித்து விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.









காலைக்கதிர் Kalaikkathir

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மன்னார் மாவட்டக் கூட்டம்

(ஹமீட்)

மன்னார் மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மாவட்டக் குழு கூட்டம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி அல்ஹாஜ் ஹுனைஸ் பாறுக் தலைமையில் நேற்று (சனிக்கிழமை) மன்னாரில் நடைபெற்றது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான பல முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்ட இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நிஸாம் காரியப்பர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். எஸ்.உதுமாலெப்பை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உச்ச பீட உறுப்பினர்களான யு.ஆ. சில்வி, முசாதிக், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் இஸ்ஸதீன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மன்னார் மாவட்ட மத்திய குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



இக் கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலை முகம் கொடுப்பது சம்பந்தமாக பல விடயங்கள் மிக ஆழமாக ஆராயப்பட்டதுடன் முக்கியமாக தற்போது மன்னார் மாவட்டத்துக்கான கட்சிக் கட்டமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அந்த கட்டமைப்புக்கான தலைமைத்துவமும் அடையாளப்படுத்தி உடனடியாக நியமிக்கப்பட வேண்டும் என்ற விடயமும் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நிஸாம் காரியப்பர் , ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளர் எம்.எஸ். உதுமாலெப்பை ஆகிய இருவரிடம் முன்வைக்கப்பட்டது.



# கிளிநொச்சி மாவட்டத்தில் பன்னாட்டு மகளிர் தினம்

சுதந்திரப் பறவைகளின் பன்னாட்டு மகளிர் தின நிகழ்வு கூட்டுறவு மண்டபத்தில் நேற்று (சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் சுதந்திரப் பறவைகள் மகளிர் பேரவையின் தலைவி திருமதி முராளினி தினேஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்,





நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவருமான சி.வி.கே சிவஞானம் ஆகியோர்கள் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு பன்னாட்டு மகளிர் தினத்தை சிறப்பித்துள்ளார். 316




காலைக்கதிர் Kalaikkathir

# புல்மோட்டைக் கனிய மணல் தொழிற்சாலையில் சம்பளம் கோரி 2ஆவது நாளாகவும் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை மாவட்ட புல்மோட்டை கணிய மணல் தொழிற்சாலையில் புதிதாக நியமிக்கப்பட்ட 83 பேருக்கு கடந்த 9 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாததால் வெள்ளிக்கிழமை முதல் நேற்றும் (சனிக்கிழமை) அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த அரசாங்கத்தின் போது நியமனம் வழங்கப்பட்டிருந்தநிலையில்குறித்தஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமல் இருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தங்களுடைய குடும்பங்கள் சாப்பாட்டுக்கு கூட கஷ்டப்பட்டு வருவதாகவும் பிள்ளைகளை கற்பிப்பதற்கு கூட வசதியின்றி இருப்பதாகவும் தமது கவலைகளை வெளிப்படுத்துகின்றனர்.

தேர்தலின் போது புதிய அரசாங்கத்திற்கு தங்களுடைய தேவைகள் நிறைவேற்றப்படும் என்ற நோக்கில் அயராது பாடுபட்டு வாக்குகளை அள்ளி வழங்கியிருந்த போதிலும் தற்போது தாங்கள் கவனிப்பாரற்ற நிலையில் இருப்பதாகவும் கவலையை வெளிப்படுத்துகின்றனர்.



எமது குடும்பங்கள் மற்றும் சிறார்களின் எதிர்கால நலன் கருதி எங்களுடைய சம்பளத்தை பெற்றுத் தருமாறு தாழ்மையாக கேட்டுக் கொள்வதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கணிய மணல் கூட்டுத் தாபனத்திற்கு வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி கடந்த மாதமளவில் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்குள்ள ஊழியர்களுடன் கலந்துரையாடியதுடன்இதுகுறித்து எதிர்காலத்தில்முறையானசம்பளம் வழங்குவதாகவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கை தபால் திணைக்களத்தால் வெளிநாடுகளுக்கு துரித பொதி சேவை நாடு முழுவதும் ஆரம்பித்துவைப்பு

இலங்கை தபால் திணைக்களத்தால் வெளிநாடுகளுக்கான துரித பார்சல் சேவை நாடு பூராகவும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு நாடு தழுவிய விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில், வவுனியா மாவட்டத்திற்கான நிகழ்வு வவுனியா பிரதான தபால் நிலையத்தில் நேற்று (சனிக்கிழமை) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்சேவை மூலம் பொருள்கள் ஆவணங்கள், தபால் போன்றவற்றை அரச பாதுகாப்புடனும், விரைவாகவும், குறைந்த கட்டணத்திலும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கலாம் என விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இச் செய்யட்பாட்டினை மக்களுக்கு தெளிவு படுத்தும் முகமாக வவுனியா தபால் ஊழியர்களால்




வவுனியா நகரப் பகுதியில் விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றதோடு துண்டுப் பிரசுரமும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் உட்பட தபால் ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டனர். 100




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.03.2025இல் வெளியிடப்பெற்றது